بسم الله الرحمن الرحيم



**F**RIDAY

**SERMON**

**01 FEBRUARY 2019**

**(25 JAMADI'UL AWWAL 1440 AH)**

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH**
**MUNIR AHMAD AZIM**

## "SIGNS FOR THE ULUL-AL-BAAB"

## "புத்திசாலிகளுக்கு அத்தாட்சிகள்"

**TAMIL VERISON /** தமிழ் பதிப்பு

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

"அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த ஆன்மாவாலும் நம்பிக்கை கொள்ள இயலாது. அறிவைப் பெற்றிருந்தும், அதனால் சிந்தித்துச் செய்படாதவர்களிடத்து அவன் தனது கோபத்தை இறக்குகின்றான்." (10:101)

அல்ஹம்துலில்லாஹ்! சும்ம அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ் தனது அத்தாட்சிகளை அசாதாரணமான வழிகளில் இறங்குகின்றான். சில நேரங்களில் நாம் கற்பனையில் கூட கொண்டு வர முடியாத நிலையிலான பொருட்கள் வழியாக தனது அத்தாட்சிகளை காட்டுகின்றான். மிக அற்புதமான நிலையில் தனது அத்தாட்சிகளை அவனுக்கு காட்ட முடியும். நிச்சயமாக அல்லாஹ் நாடுகின்றோர்களை அவன் நேர்வழியில் செலுத்துகின்றான். அவன் நாடுகின்ற தனது அடியார்களுக்கு ஆன்மீக ஞானத்தின் வாசலை திறந்து வழங்குகின்றான். அது வழியாக அவர்கள் நேர்வழியினை பெறுகின்றனர். அது சில நேரங்களில் பிறமக்களின் பார்வையில் மிக எளியதும் முக்கியத்துவமற்றதுமாக தென்படும். ஆனால் தனது அடியார்களுக்கு அந்த எளிதானவற்றில் அடங்கியுள்ள தத்துவத்தை அவன் உணரவைக்கிறான், அதன் முக்கியத்துவத்தை அவன் அவர்களுக்கு தெளிவாக காட்டுகின்றான்.

சிலவாரத்திற்கு முன்பு எனக்கு இரண்டு வீடியோ கிளிப்ஸ் கிடைத்தது. அந்த வீடியோகளில் அஹ்மதியா அமைப்பின் நன்காவது கலீ∴பா அவர்கள், இரண்டு நிகழ்வுகளைக் குறித்து பேசுகின்றார். அதிலொன்று, அன்னாரின் தர்சுல் குர்-ஆன் ஆகிறது. அந்த தர்சுல் குர்-ஆன், 1995 பிப்ரவரி 19 –ம் தேதியன்று அன்னார் நிகழ்தியதாகும். மற்றொன்று 2000- ஆண்டு வருடாந்திர ஜல்சாவின் இறுதி நாளில் அன்னார் ஆற்றிய ஒரு உரையாகிறது. முதலில் எனது தோழர்களாகிய முஹறம் நாயீப் அமீர் சலீம் சாஹிப் அவர்களுக்கும், முஹறம் நயீப் அமீர் பசில் சாஹிப் அவர்களுக்கும், முஹறம் நயீப் அமீர் ஹாரீஸ் சாஹிப் அவர்களுக்கும் நான் நன்றியினை தெரிவிக்கின்றேன். இந்த வீடியோக்களைப்பற்றிய தகவலை எனக்கு அளித்தது இவர்களாவார்கள். அந்த வீடியோவின் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியாக்கமும் கிடைத்துள்ளது.

உண்மையினை தேடும் அனைத்து மக்களிடமும், எல்லா புத்திசாலிகளிடமும் நான் உறுதியாக கூறுகின்றேன். சில அத்தாட்சிகளை அல்லாஹ் வெளிப்படுத்துவது நாம் எதிர்பாராத நிமிடங்களிலாகும். அத்தகைய அத்தாட்சிகள் எதிர்காலத்தில், சில சமயங்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் சாஹிப் அவர்கள் 1995 பிப்ரவரி 19 –ம் தேதியன்று நிகழ்த்திய தர்சுல் குர்- ஆனின் இறுதிபகுதியில் ஹஸ்ரத் முஸ்லீஹ்

மௌ ஊத் மிர்ஸா பசீறுத்தீன் மஹ்மூத் அஹ்மது (ரலி) அவர்களின் ஒரு வார்த்தையினை எடுத்து கூறியிருந்தார். அதாவது 1938 ஜனவரி 07 –ம் தேதி வெள்ளிக்கிழமையன்று முஸ்லீஹ் மௌ ஊத் (ரலி) அவர்கள் ஆற்றிய குத்துபாவில் இவ்வாறு கூறியிருந்தார்.

**"ஒருவர் ஒரு இடத்தில் உட்கார்ந்து கொண்டு முழு உலகிலும் ஆட்சியை செய்யும் நாள் வந்தடையும். அந்தநாட்கள் மிக தொலைவில்லை"**

அவ்வார்த்தையை அவர் கூறும் வேளையில் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது சாஹிப் அவர்களுக்கு 9 வயதாக இருந்தது. அன்னார் கூறுகின்றார். அவ்வேளையில், காதியான் மஸ்ஜித் அஹ்சாவில் 1938 ஜனுவரி 7-ம் தேதியன்று முதல்முதலாக லவ்ட்ஸ்பீக்கர் (Loudspeaker) அமைத்தனர். அதை தொடர்ந்து முஸ்லீம் மௌஊத் (ரலி) அவர்கள் ஜனுவரி 07-ம் தேதியன்று முதல்முதலாக லவ்ட்ஸ்பீக்கர் மூலம், முதல் பேருரையினை நிகழ்த்தினார். பின்னர் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹுமது சாஹிப் அவர்கள், தனது காலகட்டத்தின் ஒரு உதாரணத்தை எடுத்துரைத்தார். தனது, இக்காலத்தில், அதாவது 1994 ஜனுவரி 07-ம் தேதியன்று மௌரிஷியஸிலிருந்து முதல்முதலாக சர்வதேசிய அளவிலான அஹ்மதியா முஸ்லீம் டெலிவிஷன் ஆரம்பித்தனர்.

இந்த அசாதாரணமான நிமிடத்தை எனக்கு மறக்க முடியாது. எனது தாய் நாடாகிய மௌரிஷீயஸிலிருந்து எம்.டி.எ என்னும் சர்வதேசிய தொலைகாட்சி ஆரம்பித்தது. அந்த நாளினை எனக்கு ஒருபோதும் மறக்க இயலாது. ஏனெனில் அந்நாள் எனது பிறந்த நாள் ஆகிறது. அன்று எனக்கு 33 வயதாக இருந்தது. அந்த வரலாற்று நிகழ்வை, அத்தினத்தில்தான் அல்லாஹ் தேர்ந்தெடுத்தான். இந்த சிறுநாட்டில் அதாவது மௌரீஷியஸில் வைத்து இந்த உலகநிகழ்வு ஜனுவரி 7-ம் தேதியன்று ஆரம்பித்தது. அந்நாள் என் பிறந்த நாள் ஆகிறது.

அந்த நிகழ்வின்போது, அல்லாஹ் என் மனதில் அதை போட்டிருந்தான். (ஆனால் அந்த சமயத்தில் நான் இதைப் புரிந்து கொள்ளவில்லை) அவன் என்னை சிந்திக்கவைத்தான். இந்தியாவுக்கு பிறகு, இந்தியாவுக்கு வெளியே முதலாவதாக இந்த அமைப்பை நிறுவப்பட்டது லெண்டனில் ஆகும். லெண்டனுக்கு பிறகு மௌரீஷியஸில் ஆகும். எல்லா நிலையிலும் இந்த வெகுமதியை பெற்ற அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மௌஊத் (அலை) அவர்களின் செய்தி லெண்டனுக்கு பிறகு மௌரீஷியஸில்தான் வேரூன்றியது. அன்று முதல்

மௌரீஷியஸில் அஹமதியா ஜமாஅத்து நிலைநிற்கிறது. லெண்டனுக்கு பிறகு எம்.டி.எ தொலைக்காட்சி சர்வ தேசிய அளவில் மௌரீஷியஸிலிருந்து அதாவது 1994 ஜனுவரி 07-ம் தேதியிலிருந்து 24 மணிநேரமும் ஒளிபரப்பட்டது. இக்காரியத்தை மறைத்த ஹஸன் ராம்ஜானுடன் நான் கூறியிருந்தேன். இக்காரியத்தில் அன்னார் என் மீது மிக பெரிய மதிப்பை வைத்திருந்தார். அன்னார், தனிப்பட்ட முறையில் இக்காரியங்களையாவும் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹமது அவர்களின் பிரதிநிதி குழவிடம் கூறியிருந்தார். (மாஜித் தாஹிர், முனீர் ஜாவேத், மேஜர் போன்றவர்களிடம்) பின்னர் இவ்விளக்கம் கலீ∴பாவின் கவனத்தில் வந்தபோது, இந்த காரியத்தை அதாவது இந்த சிந்தனையை அவர் அங்கீகரித்துக் கொண்டார். பின்னர் உலகிற்கு அதனை அன்னார் பகிர்ந்து கொண்டார்.

இதே சிந்தனைகள், மறைந்த ஹஸன் ராம்ஜான் அவர்கள் மௌரீஷியசைசார்ந்த அதிகாரிகளிடமும் பகிர்ந்து கொண்டார். ஆனால் இதை அவர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. காது கேளதாவர்களைப் போன்று அவர்கள் திரும்பி கொண்டனர். அவர்கள் அதற்கு எந்த முக்கியத்துவமும் அளிக்கவில்லை. எனெனில் அந்த சமயத்தில் அவர்கள் என்னை ஜமாஅத்தின் ஒரு ஓட்டுனராக மட்டும் கண்டனர். மறைந்து போன பய்யா ஹஸன் ராம்ஜான், மாலையில் என்னை மேலும் சந்தித்தார். மஹ்ரீப் தொழுகைக்கு முன்பு அன்னார் நடந்த காரியங்களை அனைத்தும் என்னிடம் கூறினார். அதாவது மௌரீஷியஸ் ஜமா அத்தை சார்ந்த சில அதிகாரிகளிடம் இக்காரியத்தை நான் கூறிய போது அதை அவர்கள் கவனிக்கவே இல்லை. அந்த வேளையில் மறைந்துபோன பய்யா ஹஸன் ராம்ஜான் என்னிடம் மிகுந்த மதிப்பை வைத்திருந்தார். என் தப்லிக் பணிகளைக் குறித்து என்னிடம் அதிகமாக பேசுவார். என் தப்லீக் பணிகளின் கதையினை செவிகொண்டபின், அந்நிகழ்வுகளை அன்னார் ஜமா அத்தின் வருடாந்திர மாநாட்டிலும் மற்றும் ஜமா அத்தின் பிற கூட்டங்களிலும் தனது சொற்பொழிவின் இடையே எடுத்து கூறுவது வழக்கமாக இருந்தது.

தற்போது மௌரீஷியஸில் தோன்றிய இறை அத்தாட்சிகளை குறித்தும், அத்துடன் ஹஸ்ரத் மஸீஹ் மௌஊத் (அலை) அவர்களுடையவும் ஹஸ்ரத் முஸ்லீஹ் மௌஊத் (ரலி) அவர்களுடையவும் எல்லா தீர்க்கதரிசனங்களின் அடிப்படையில், அவர்களுக்கு பின்தோன்றும் மஸீஹ்மார்களுடைய மற்றும் சீர்திருத்தாளர்களின் வருகையை குறித்தும், அத்தகைய மஸீஹ் மற்றும்

சீர்திருத்தாளர்களின் உண்மைக்கு சான்றாக திகழும் தீர்க்கதரிசனங்களை குறித்தும் இன்று உங்களுடன் பேச நான் விரும்புகின்றேன்.

அசாதாரணமான நிலையில், அதே நாளில்தான், இந்த அருக்குரிய வார்த்தையினை அவன் நிறைவேற்றிக் காட்டினான். அதனை அவன் வெளிப்படுத்திக் கொண்டான். அவன் தேர்ந்தெடுத்த தூதர் வழியாக, இந்நூற்றாண்டின் கலீ:.பத்துல்லாஹ் வழியாக அவ்வார்த்தையினை அவன் நிறைவேற்றிக்காட்டினான். 1961 ஜனுவரி 7-ம் தேதி எனது பிறந்தநாள் ஆகிறது. மட்டுமின்றி ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹமதின் காலகட்டத்தில் தான் இந்த மகத்தான நிகழ்வு நடைப்பெற்றிருக்கின்றது. அது அல்லாஹ் தனது ஒளியினை திசைமாற்றி இயங்கவைத்தான் என்பதற்கு சிறந்த ஆதாரமாக அமைந்திருக்கின்றது. மனிதன் வாக்கு போடாமல் அவன் தனது அடியாரை தேர்வு செய்தான். அவன் சுயம் றூஹில் குத்தூசுமாக ஒரு கலீ:.பத்துல்லாஹ்வை எழுப்பிக்கொண்டான்.

ஒரு சீர்திருத்தாளரை, ஒரு இஸ்லாமிய தூதரை உலகிற்காக அவன் சமர்பித்துவிட்டான். இண்டர்நெட் மற்றும் வெப்சைட் போன்ற உயர் தொழில் நுட்பங்கள் முலம் தகவல்களை விரைவில் கைமாறி, உலகையே இன்று கட்டுபடுத்திக் கொள்ளலாம். கையால் ஓரேயொரு கிளிக் செய்தால் போதும் பயபக்தி மற்றும் களங்கமற்ற நம்பிக்கையாளர்களை அல்லாஹ்வின் நெட்வர்க்கின் பகுதியாக மாற்றுமளவிற்கு நாம் முன்னேற்றமடைந்துள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்! ஹஸ்ரத் முஸ்லீஹ் மௌஊத் (ரலி) அவர்களின் அந்த வாார்த்தை மிக சிறப்பான நிலையில் நிறைவேறியது. இந்த எளிய அடியானுக்கு 40 வயது நிரம்பிய போது, ஒரு நவீன நூற்றாண்டில் ஒருவர் ஒரு இடத்தில் உட்காந்து அனைத்தையும் கட்டுபடுத்துமளவிற்கு காலம் வந்தடைந்தது. அந்நபரை 2004 –ம் ஆண்டில் இந்நூற்றாண்டின் முஸ்லீஹ் மௌஊத் ஆக அல்லாஹ் எழுப்பிக்கொண்டான். ஆன்மீக சூழலில், மஸீஹ் மௌஊத் (அலை) அவர்களின் ஜமாத்தின் அடிப்படையிலும் மற்றும் முஸ்லீஹ் மௌஊத் (ரலி) அவர்களின் நோக்கத்தின் அடிப்படையிலுமான அத்தீர்க்கதரிசனம் என் மூலமாக நிறைவேறியது. **“அல்லாஹ் அக்பர்”**

முஸ்லீஹ் மௌஊத் ஹஸ்ரத் மிர்ஸா பசீருத்தீன் அஹமது (ரலி) அவர்களின் காலத்தில், அல்லாஹ் அத்தகைய ஒரு வார்த்தையினை அன்னார்

வாயிலாக கூறவைத்தான் என நமக்கு புரிந்துக் கொள்ளலாம். அது மற்றொரு முஸ்லீஹ் மௌஊதின் காலகட்டத்தில் மிக சிறப்பான நிலையில் விடியலாகியது. அக்காலத்தில் ஒலிப்பெருக்கிகள் ஒரு பெரிய கண்டுபிடிப்பாக இருந்தது. தொடர்பு துறையில் அது மிக பெரிய ஒன்றாக மாறியது. அந்நிகழ்வு 1994 –ம் ஆண்டு ஜனுவரி மாதம் 7 –ம் தேதியன்று நடைபெற்றது. இரண்டவாதாக, ஒரு முஸ்லீஹ் மௌஊதாகவும் கலீ∴.பத்துல்லாவாகவும் அல்லாஹ் தேர்தெடுத்த ஒருவரைக் கொண்டு அவன் அவ்வாறு சிந்திக்கவைத்தான். பின்னர் அச்சிந்தனையினை அவன் பரவ வைத்தான். அதாவது அஹமதியா ஜமா அத்தின் 4- வது கலீ∴.பாவின் கவனத்திற்கும் அக்காரியம் எட்டியது. லெண்டன், மௌரீஷியஸை விட முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியினை அடைந்திருந்தும் அல்லாஹ் மௌரீஷியஸைத்தான் தேர்வு செய்தான். அவன் தனது தூதரை அங்கிருந்தே எழுப்பிக்கொண்டான். அல்லாஹ் தனது பிரதிநிதியியை தேர்வு செய்தான் என்பதும், சர்வதேசிய அளவில் எம்.டி.எ. தொலைகாட்சியை இயங்க வைத்தான் எனபதும் அவன் விதியின் விடியலாக இருக்கின்றது. எனவே **“ஒருவர் ஒருபகுதியில் எழும்பி அங்கிருந்து உலகம் முழுவதும் ஆட்சி செய்வார்”** என்ற தீர்க்கதரிசனத்தைப் பற்றியும் மட்டுமல்லாது, இந்த சிறு தீவு -ஆன மௌரீயஸில் இன்னொரு முஸ்லீஹ் மௌஊத் பிறந்தார் என்பதை குறித்தும் சிந்திக்கும் புத்திசாலிகளுக்கு பல தகவல்கள் உள்ளன.

ஆழாமாக சிந்தித்தால், ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது அவர்கள் அந்த அருளுக்குரிய நபராகுவதற்கு ஆசைப்பட்டார். ஹஸ்ரத் மஸீஹ் மௌஊத் (அலை) அவர்கள் தீர்ாதரிசனம் செய்திருந்தார். அன்னராரின் தந்தையாகிய ஹஸ்ரத் மிர்ஸா பசீருத்தீன் மஹ்மூத் அஹ்மது (ரலி) அவர்கள் அன்னாரின் நேக்கத்தில் முஸ்லீஹ் மௌஊத் அல்ல. இங்கு குறிப்பிடுவது ஒரு துவாவைக் குறித்தாகும். அதாவது 30- ஜுன் 2000 –ஆண்டு அன்று ஜல்சாவின் இறுதிநாளில் அன்னார் துவா செய்திருந்தார். அப்துல்கஹ்பார் ஜன்பாஹ் சாஹீப் இச்செய்தியை தனது ஜுமா பேருரையில் (23-11-2018) கூறிப்பிட்டிருந்தார். வருடாந்திர மாநாட்டின் இறுதி பேருரையின் போது ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது அவர்கள் தனக்காக அனைத்து ஜமா அத்தும் பணிவுடன் பிரார்த்தனை செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார். அவ்வாறேயானால் முபாரக் வஜுத் அதாவது “அருளுக்குரியவர்” என்ற திர்க்கதரிசனம் தனக்குரியதாக அமையும் என அவர் எண்ணினார். அது அன்னாரின் விருப்பமாக இருந்தது.

டெல்லியிலுள்ள எனது ஒரு தோழர் இக்காரியத்தின்பால் என் கவனத்தை ஈர்த்தார். அதில் அன்னார் அதாவது **ஹஸ்ரத் முகறம் பசில் ஜமால் சாஹிப்** அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்.

"ஹுசூர், செஷெல்லியஸில் நீங்கள் மேற்கொண்ட உயரிய தொண்டு மற்றும் மேம்பாட்டினை அங்கீகரித்து, 2000 –ம் ஆண்டில் லெண்டன் ஜல்சாவின் இரண்டாவது நாள் அஹ்மதியா ஜமாஅத்தின் நன்காவது கலீ.்.பா அவர்கள் உங்களை பிரத்தியேகமான நிலையில் பாரட்டினாரல்லவா? அதே ஜல்சாவின் மறுநாள் அதாவது ஜல்சாவின் இறுதி நாளில் நன்காவது கலீ.்.பா அவர்கள் தனக்காக மிக பணிவான நிலையில் "துவா" செய்ய ஜமா அத்திடம் கேட்டுக்கொண்டாரல்லவா? வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தீர்க்கதரிசனத்திலிருந்து, நான்காவது கலீ.்.பா அவர்கள் இவ்வாறு புரிந்திருந்ததாக உணரலாம். அதாவது முபாரக் வஜுத் என்னும் அருக்குரிய இறைபிரதிநிதி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மின் பரம்பரையிலிருந்து தோன்றுவார் என்றும் அது தானாகவே இருக்க வேண்டும் என்றும் அன்னார் விரும்பியிருந்தார். அத்தகைய சிறப்பான அருளினை அல்லாஹ் தன் மீது பொழிய வேண்டும் என அன்னார் விரும்பினார். இது சிந்திப்பதற்கு சுவாரசியமான ஒரு அத்தாட்சியாக நான் புரிந்துக் கொள்கின்றேன்."

என் தோழர் ஹஸ்ரத் முகர்ரம் பசில் ஜமால் சாஹிப் அவர்களின் இந்த கருத்து வெகு ஆழத்திலான சிந்தனையை பிரதிபலிப்பிக்கும் ஒன்றாக அமைந்துள்ளது. இது, மறைந்துபோன மௌலான அஹமது ஷா நுறானியின் ஞாபகத்தை வரவழைக்கிறது. அன்னார் உலக இஸ்லாமிக் அமைப்பின் தலைவராகயிருந்தார். அன்னார், 15 –ம் நூற்றாண்டின் முஜத்தீது என சுயம் அறிக்கை விடுத்தார். அந்த அறிக்கையை குறித்து ஒரு நூல் வெளியிடுவதற்கான பணியில் அவர் ஈடுபட்டார். ஆனால் அன்னார் மிக விரைவில் இறந்து விட்டார். அந்நிலையில் அன்னாரின் தோழர்கள் அந்நூலை மறைத்துவைத்தனர். அன்னாரின் தோழர்கள் மத்தியிலும், முஹம்மது (ஸல்) வின் சமுதாய மத்தியிலும் ஒரு குழப்பம் எழும்பாமலிருக்க அந்நூலை அவர்கள் வெளியிடவில்லை. அவர்களின் இந்த மானோபாவத்தில் என்ன நன்மையில்லை? அவாகளைப் பெறுத்தவரையில் அவர்களின் நூலை அவர்களுக்கு மறைத்து வைக்கலாம். அதில் எந்த விமர்சனவும் கூடாது. ஆனால் அவர்கள், நம்மை அதாவது அஹமதிகளை குற்றம் கூறுகின்றனர். நாம், மஸீஹ் மௌஊத்

(அலை) அவர்களின் அனைத்து நூல்களையும் மொழிபெயிர்த்து வெளியிடுவோம். அது வழியாக அன்னார் கூறிய வார்த்தையும், அன்னார் விடுத்த அறிக்கையும், அது எந்த சூழ்நிலையில் என்பதையும் நாங்கள் தெளிவாக புரிந்து கொள்வோம். அதன் வார்த்தை பொருளல்ல மாறாக அதன் கருத்து தான் அவசியம். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைவிட உயர்ந்த நபர் என்ற நிலையில் நாம் புரிந்துக் கொள்ள கூடாது.

ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹமது செய்த இந்த தூவா, அன்னாரின் நம்பிக்கையின் பகுதியாகும். அதாவது ஜமாஅத்து அஹ்மதியாவிலிருந்து மனிதர்கள் தேர்ந்தெடுக்கும் எல்லா கலீ∴பாக்களும் முஜத்தீதாக இருப்பார்கள் என்றும் அச்செயல் இறுதி நாள்வரையிலும் நீடித்து வரும் என்றும் அன்னார் நம்பிக்கை கொண்டார். ஆனால் அன்னாரின் அந்த நம்பிக்கை முற்றிலும் தவறாக இருந்தது. அன்னார் ஒரு துவா செய்தார். ஆம்! ஆனால் அல்லாஹ் தனதான நிலையில் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்தான். அன்னார் அதாவது ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது சர்வதேசிய அளவில் அனைத்து ஜாமா அத்தினுடைய முன்னிலையில் வைத்து அந்த நபரை புகழ்ந்தார். அச்செய்தி முஸ்லீம் டெலிவிஷன் அஹ்மதியா வழியாக உலகெங்கும் ஒளிபரப்பபட்டது. அன்னர் ஆற்றிய இறை செயலுக்காக பாராட்டிக்கொண்டார் அல்லாஹ்வின் அருட்கொடையால், பிறகு அன்னார் என் மீது சாபவார்த்தைகளை கொட்டியிருந்தும் கூட இன்று நான் உங்கள் முன்பாக அல்லாஹ்வின் மாபெரும் அருட்கொடைகளை பெற்று நிற்கிறேன். என் வாழ்நாளிலையே அன்னார் இறந்து விட்டார். நான் அதனை ஒருபோதும் அகந்தையுடன் கூறுவதல்ல மாறாக இதில் சிந்திப்பதற்கு பலகாரியங்கள் எஞ்சுகிறது என்பதனால் மட்டும் நான் அதனை நினைவூட்டுகிறேன். உண்மையினை உணர்ந்துக் கொள்ள விரும்புகின்றோர்களுக்கு இதில் பல காரியங்கள் உள்ளன.

அவர் கர்வமுடையவர் ஏனெனில் அல்லாஹ் நியமித்த ஒருவரை ஏற்றுக்கொள்ளாமல், நிராகரித்துவிட்டார். அவர் கடுமையான பொறமை நிறைந்த உள்ளத்தை கொண்டவர். இப்லீஸ் கடுமையான பொறமையினை காட்டியது போன்று அவர் செயல்பட்டார். இறைவெளிப்பாட்டுடன் தனது கலீ∴பத்துல்லாஹ் ஆகிய ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களை நியமித்தபோது என்ன நிகழ்ததோ அதுவே இங்கும் நிகழ்ந்தது. அந்நிகழ்வு முற்றிலும் துரதிஷ்டவசமாகும். அக்காலகட்டத்தில், அஹ்மதியா ஜமா அத்தின் ஆன்மீக தலைவர் என்ற

நிலையில் அன்னார் மீது நான் மிகுந்த மதிப்பு மற்றும் அன்பினை வைத்திருந்தேன். ஆனால் அன்னார் திமிர்பிடித்தவரைப்போன்று செயல்பட்ட போது, அதைப்போன்றே ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தீதுகள் வருகை தருவார்கள் என்ற திருநபிமொழியினை நிராகரித்தபோது, பாற்வோனை சந்திப்பதற்கு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை எழுப்பியது போன்று அல்லாஹ் என்னை எழுப்பிக்கொண்டான். தனது ஒரு கருவியாக அல்லாஹ் என்னை பயன்ப்படுத்தினான். அன்னாரை அல்லாஹ் மன்னிப்பானாக! ஆனால் அன்னார் இந்த உண்மையினை கேளாதவரைப்போன்று நடந்துவிட்டார். உண்மைக்கு எதிராக செயல்பட்டார். எங்களை (முனீர் அஹமது அஸீம், சபறுல்லாடேமூண் சாஹிப்) நிஸாமே ஜமா அத்திலிருந்து வெளியேற்றினார். பின்னர் அன்னார் கூறியவார்த்தையினை பாருங்கள். உலகெங்கும் ஜமாஅத் முன்னேற்றத்தை நோக்கி செல்கின்றது. லட்சகணக்கிற்கான மக்கள் ஜமா அத்தில் நுழைந்து வருகின்றனர். இந்த இரண்டு நபர்களும் வெளியேறியதால் ஜமா அத்திற்கு எதுவும் நிகழாது. “நீங்கள் சென்று உங்களுக்காக ஒரு ஜமாஅத்தை உருவாக்கி கொள்ளுங்கள் என கர்வமுடன் எங்களிடம் அன்னார் கூறினார்

அல்லாஹ்வின் பிரதிநிதி கூறியதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் என்னையும் என்மீது நேர்மையான முறையில் நம்பிக்கை கொண்ட மக்களையும் அல்லாஹ் பாதுகாத்தான். இன்று வரையில் அப்பாதுகாப்பு தொடர்கிறது. இன்ஷா அல்லாஹ்! வரும் காலங்களிலும் அவன் தனது அருட்கொடைகளை நம்மீது பொழிவான். இஸ்லாமின் மகத்துவம் நிலைநிற்கும். நம் வழியாக அதனை அவன் நிலை நாட்டுவான். தனது ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் வழியாக அதனை அவன் நிலை நாட்டுவான். இன்ஷா அல்லாஹ்

ஹஸ்ரத் மஸீஹ் மௌஊத் (அலை) அவர்கள் தனது ஒரு கட்டுரையில் விவரித்திருப்பதை போன்று! அதவாது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கூறுகின்றார்.

**“பலதரப்பட்ட மத நிறுவுனர்களாகிய மதிப்புமிக்க நபர்களுக்க எதிராக மோசமான வார்த்தைகளை பயன்படுத்தும் செயலானது மிக இழிவானதும் தீயதானதும் ஆகும். இறைவன் தனது எண்ணற்ற ஞானத்தால், தனது**

**பிரதியேகமான விருப்பதால் மக்களுக்கு நேர்வழியினை காட்டுவதற்கு தலைவர்கள் மற்றும் சீர்திருத்தாளர்களை நியமிக்கின்றான். அதன் விளைவாக ஒளிமயமாக பரிணமிக்கும் அவர்களின் ஆன்மாக்கள் காரணம் உலகம் அருளுக்குரியதாக மாறிவிடுகிறது. மட்டுமின்றி அவர்கள் வயிலாக இறைவனின் ஏகத்துவமும், இறைவணக்கமும் உலகெங்கும் ஒளிர்கிறது. அவர்களின் ஆற்றல் வாய்ந்த போதனைகள் காரணமாக உருவ வணக்கம், இறைவனக்கு இணை வைத்தல் போன்றவற்றின் வேர் அறுந்துவிடுகிறது. உருவவணக்கம், இறைவனுக்கு இணைவைத்தல் போன்றவை எல்லாவகையான தீமைகளுடைய அன்னை ஆகிறது. அந்த போதனைகள் வழியாக இத்தகைய தீமைகள் (சிலை வணக்கம்) உலகின் பல பகுதிகளிலிருந்தும் அழிந்து விடுகிறது. வரண்டு போன மரம் புத்துயிரை பெறுவதைப் போன்று அவர்கள் ஏக இறை வழிப்பாட்டின் ஞாபகத்தை பூமியில் அழைத்துவருகின்றனர். விழுந்து போன ஏக இறை வழிப்பாடு என்னும் கட்டிடத்தை அவர்கள் மேலும் திடமான அஸ்திவாரத்தால் அமைக்கின்றனர். அவன் மிக்க மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு பாதுகாப்பை அளிக்கின்றான். மிக சிறந்த முறையில் அவர்களுக்கு ஆதரவை வழங்குகின்றான். இலட்சகணக்கான மக்கள் அவர்களுக்கு எதிராக எழுந்துநின்றால் கூட அவர்கள் அஞ்சமாட்டார்கள். அவர்களின் அப்பணியில் உறுதியுடன் நிலைத்திருப்பார்கள். எல்லா விதமான அபாயங்களிலிருந்தும் இறைவன் அவர்களை பாதுகாப்பான். பகைவர்களின் திட்டங்களை அவன் தோற்கடிப்பான். முடிவில் அவர்கள் உண்மையினை இப்பூமியில் நிலை நாட்டுவார்கள். இத்தகைய இறைபிரதிநிதிகள் மீது சாபவார்த்தையினை கொட்டுவது இறை எண்ணமில்லாதவர்களின் செயலாகும்.”**

(P.110: பறாஹினே அஹ்மதியா Part I and II, UK: இஸ்லாம் International Publications Ltd 2012)

சிந்திக்கும் மக்களுக்கு இவற்றில் படிப்பினை உள்ளது. எவர் இதிலிருந்து பலன் பெறுவார்? உண்மையில் மனம் மற்றும் புத்தியினை பயன்படுத்துகின்றவர்கள் இதிலிருந்து பலன் பெறுவார்கள். அவர்களுக்கு சிலவேளை உயர்ந்த கல்வி தகுதி இல்லாமல் இருக்கலாம். எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் தெரியாதவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள், தங்களது மனதை சுத்தம் செய்து வைத்திருப்பார்கள். உண்மையினை ஏற்றுக்கொள்வதற்கும் அங்கீகரித்துக் கொள்வதற்குமான ஆற்றலை அல்லாஹ்

அவர்களுக்கு அளித்திருப்பான். அல்லாஹ்வின் அனுமதியின்றி, எவருக்கும் நம்பிக்கை கொள்ள இயலாது. அல்லாஹ் நாடுகின்றவர்களை அவன் நேர்வழியில் செலுத்துகின்றான். இஸ்லாமின் இந்த உண்மையை அங்கீகரித்து கொள்பவர் எவரோ, இறைதூதரை ஏற்றுக் கொள்பவர் எவரோ, அல்லாஹ்வின் வழியில் அயராத முயற்சிகளை மேற்கொள்பவர் எவரோ, எது நிகழ்தாலும் சரி தயக்கமின்றி இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள முன்வருபவர் எவரோ அவர்களுக்கு நிச்சயமாக அல்லாஹ் உதவி புரிவான். அல்லாஹிவின் அன்பினை தங்களிடம் அழைத்த வருவதற்காக அவர்களுக்கு பலதரப்பட்ட தியாகங்களுக்கு ஆளாக வேண்டிய நிலை உருவாகும். அவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுபடுகின்றவர்களாக இருக்க வேண்டும். இன்ஷா அல்லாஹ்!

உண்மையை தேடும் எல்லாமக்களுக்கும், அதைப்போன்றே அஹ்மதியா முஸ்லீம்களுக்கும், இஸ்லாமிய உம்மதத்தை சார்ந்த எல்லா மக்களுக்கும் (அவர்கள் புத்தியினை பயன்படுத்துகின்றவர்களாகயிருந்தால்) இந்த பேருரையினை நல்லமுறையில் உணர்ந்து விடுவதற்கான உதவியை அல்லாஹ் வழங்குவானாக! இந்நூற்றாண்டின், அல்லாஹ்வின் இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள முன்வாருங்கள். அல்லாஹ்வின் கலீ.்.பா தோன்றியிருக்கின்றார். அவனது ஜமா அத்துச்சஹீஹில் இல்லாம் தோன்றியிருக்கின்றது. அதை ஏற்றுக்கொள்ள முன்வாருங்கள். இன்ஷா அல்லாஹ் ஆமீன்.

**Translated by:**
*Naib Amir - Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**